भारतीय गैर न्यायिक

एक सौ रुपये **Rs. 100**

रू. 100 ONE HUNDRED RUPEES

सत्यमेव जयते

भारत INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU

CN 235420

K. Subramanian

K. சுப்பிரமணிய பிள்ளை
முத்திரை விற்பனையாளர்
திருவட்டார்
உ.எண்:403/B/88

தமிழ் நாடு எண் 14657
ரூ. 100 நாள் 17/12/2021
பெயர் Secretary, N.V.K.S.D College of Education Autonomous
ஊர் Attoor.

## MoU

2021 வருடம் டிசம்பர் மாதம் 18-ம் நாள் இன்றைய தேதியில் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தில் இணைவுபெற்று கன்னியாகுமரி மாவட்டம், ஆற்றூர் பகுதியில் இயங்கிவரும் என்.வி.கே.எஸ்.டி. கல்வியியல் கல்லூரியின் செயலராகிய நான், S. Krishna Kumar கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பகுதியில் இயங்கிவரும் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராகிய நான், N.Subhananda Raj ஆகிய நாம் இருவரும் ஒரு மனதாக இணைந்து ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் யாதெனில், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக ஆட்சிமன்றக்குழுவின் தீர்மானத்தின் படி, இச்சமுதாய முன்னேற்றத்திற்காகவும், இப்பள்ளியில் பயிலும் மாணாக்கர்களின் கல்விச்சாந்த, பணிபுரியும் ஆசிரியர்களின் திறன் சார்ந்த மற்றும் பிற வளர்ச்சி சார்ந்த முன்னேற்றத்திற்காகவும், கீழ்க் குறிப்பிட்ட செயல்பாடுகளை 1-ம் நபரின் கல்லூரியின் சார்பாக செய்வதென ஒப்புக்கொண்டு, அதற்கு 2-ம் நபரின் பள்ளியின் சார்பில் முழு

ஒத்துழைப்பினை முழு மனதுடன் வழங்குவதாக உறுதி அளித்து, இந்த ஒப்பந்தம் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்த இயக்குநர் மற்றும் பல்கலைக்கழக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முன்னிலையில் செய்துக் கொள்ளப்படுகிறது.

## செயல்பாடுகள் விபரம்

1. பள்ளி ஆசிரியர்களுக்கு நோக்குநிலை (Orientation) நடத்துவது
2. பள்ளி வேலை நேரத்திற்கு பிறகு பரிகார கற்பித்தல் (Remedial teaching) நடத்துவது
3. வாழ்க்கை திறன் (Life skill) கல்வி மாணவர்களுக்கு நடத்துவது
4. பள்ளியின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது
5. மாணவ ஆசிரியர்களுக்கு மாதிரி பயிற்சி (Practice teaching) வகுப்பு நடத்துவது
6. கற்பித்தலுக்கான செயல் அரங்கு (Workshop) நடத்துவது
7. வளாகத்தை வெவ்வேறு கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டு விழா நடத்த பகிர்ந்து கொள்வது
8. பள்ளி மாணவர்களுக்கு எதிர் காலத்திற்கான கலந்துரையாடலும், வழிகாட்டலும் (Guidance Counselling) நடத்துவது
9. புதிய கற்பித்தல் தொடர்பான விழிப்புணர்வு பள்ளி ஆசிரியர்களுக்கு ஏற்படுத்துவது
10. பள்ளி மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் தகுதியுள்ளவர்களை தேர்ந்தெடுத்து ஊக்கத்தொகை (Scholarship) வழங்குவது

Signature of the School Head Master
HEADMASTER
GOVT. BOY'S HIGHER SECONDARY SCHOOL
MARTHANDAM - 629 165
KANYAKUMARI DISTRICT

Signature of the College Secretary
SECRETARY
NVKSD COLLEGE OF EDUCATION
AUTONOMOUS
ATTOOR P.O., K.K. DIST.

Signature of the MOU Director
Prof. S. Mani
MOU Director
Tamil Nadu Teachers Education University
Karapakkam, Chennai - 600 097.

Signature of the District Coordinator

Signature of the Registrar

REGISTRAR i/c
TAMIL NADU TEACHERS EDUCATION UNIVERSITY
KARAPAKKAM, CHENNAI - 600 097.